09.04.2026

O.S.No. 2/2017

PW1– முருகேசன் – த/பெ. ஆறுமுகச்சாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.04.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( 4 ம் பிரதிவாதி தரப்பில்)

1. நான் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கை முத்துச்சாமிதேவரின் வாரிசுகள், முருகையாத்தேவரின் வாரிசுகள், ஆறுமுகச்சாமித்தேவரின் வாரிசுகள் ஆகிய இந்த வழக்கு வாதிகளும், 4 ம் பிரதிவாதியும் சேர்ந்து வழக்கை தாக்கல் செய்தோம்.

2. 6 ம் வாதியின் தந்தை பெயர் என்னவென்றால் முருகையாத்தேவர். முருகையாத்தேவரின் வாரிசுகள் கற்பகவள்ளி, துரைச்சி, முத்துலட்சுமி, திலகம் என்ற பெருமாள் மற்றும் அன்னலட்சுமி ஆகியோர்கள் பெண்வாரிசுகள். மாரித்துரை(6 ம் வாதி), மணிகண்டன்(4 ம் பிரதிவாதி) ஆண்வாரிசுகள்.

3. இந்த வழக்கில் முத்துலட்சுமி, திலகம் என்ற பெருமாள் மற்றும் அன்னலட்சுமி ஆகியோர்களை ஏன் கட்சி சேர்க்கவில்லை என்றால் 1997 ம் ஆண்டு 6 ம் வாதி மற்றும் 4 ம் பிரதிவாதிக்கு ஆதரவாக ஒரு விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டதால் அவர்களை கட்சி சேர்க்கவில்லை. மேற்படி ஆவணம் தான் இந்த வழக்கின் வா.சா.ஆ.13 என்றால் சரிதான்.

4. 6ம் வாதி எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் சுரண்டையில் வசித்துவருகிறார். நான் இந்த வழக்கின் 6ம் வாதியின் ஆதார் அட்டையில் உள்ள முகவரியை தான் இந்த வழக்கு பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் வா.சா.ஆ.13 ஆவணத்தில் உள்ள முகவரியை குறிப்பிட்டுள்ளேன்.

5. 7ம் வாதியை 4ம் பிரதிவாதியாக Transpose செய்ததற்கான காரணம் என்னவென்றால் வழக்கிற்கு பிறகு எங்களுக்கு இடையில் பேச்சுவார்த்தை இல்லாததால் அவரை Transpose செய்துவிட்டேன். 6ம் வாதிக்கும், 7ம் வாதிக்கும் பிரச்சனை இருந்ததாலும், அவர் எங்களிடம் சரியாக பேசாததாலும், வழக்கு நடத்த முன்வராததாலும் அவரை 4ம் பிரதிவாதியாக Transpose செய்தேன்.

6. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் 47 செண்ட். அதன் பழைய புல எண்.54/29, புதிய புல எண்.506/27. மேற்படி 47 செண்டும் ஆதியில் சுப்பிரமணியத்தேவருக்கு பாத்தியப்பட்டிருந்தது. எனது பூட்டன் பெரியசாமித்தேவர் மேற்படி சுப்பிரமணியத்தேவரின் வாரிசு ராமசாமித்தேவரிடமிருந்து மேற்படி சொத்தை கிரையம் வாங்கினார்.

7. பிராதில் 2 தபசில்கள் உள்ளது. தற்போது 1ம் தபசில்சொத்து 5 செண்ட் என கூறினார். மேலும் பிராது 2ம் தபசில்சொத்து 30 செண்ட், இரண்டு தபசில்களையும் சேர்த்து 35 செண்ட். பிராது தபசில் சொத்துக்களின் அனுபவம் எங்கள் வசம் தான் உள்ளது. நான் எங்கள் வசம் என குறிப்பிடுவது மேற்படி 35 செண்டைதான். எங்கள் வசம் என்பது 1 முதல் 14 வாதிகளும் மற்றும் 4ம் பிரதிவாதியும்.

8. 6ம் வாதியின் தந்தை 1987ம் ஆண்டு இறந்துவிட்டார். 6 ம் வாதி மற்றும் 4ம் பிரதிவாதி பிறந்ததிலிருந்து பிராது முகவரியில் வசிக்கிறார்களா அல்லது அச்சன்புதூரில் வசித்துவருகிறார்களா என்றால் பிராது முகவரியில் வசிக்கிறார்கள், ஆனால் அச்சன்புதூரிலும் வீடு உள்ளது.

9. 4ம் பிரதிவாதியை அவரது தந்தை முருகையாத்தேவர் தத்துகொடுத்துவிட்டார் என்றால் முருகையாத்தேவரின் மனைவி இறந்தபிறகு 6ம் வாதியையும், 4ம் பிரதிவாதியையும் அவர்களின் தந்தை வழி அத்தை வெள்ளைத்தாய் அழைத்து சென்றுவிட்டார்.

10. 4ம் பிரதிவாதி வெளிநாட்டில் கப்பலில் பணியாற்றிவந்தார் என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது. பிராது பரிகாரத்தில் எந்த திருத்தமும் செய்யவில்லை என்றால் சரியல்ல, திருத்தம் செய்துள்ளேன்.

11. 1ம் பிரதிவாதி 2 , 3 பிரதிவாதிகளின் தந்தை என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி வெளிநாட்டில் இருந்ததால் அவரை இந்த வழக்கில் 4ம் பிரதிவாதியாக Transpose செய்துள்ளேன் என்றாலும், நான் தான் அவரைதொடர்பு கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. 4ம் பிரதிவாதி சொல்வது பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரிதான்.

**ஒப்பம்/- K.N. குரு**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**